# UNIVERSITY OF MADRAS

# MADRAS UNIVERSITY FREE EDUCATION SCHEME 2025-2026

**Dear students,**

**ONLINE APPLICATION FORM WILL BE OPEN AFTER THE PUBLICATION OF PLUS-TWO RESULT. KEEP THE SCANNED COPIES OF ALL THE REQUIRED DOCUMENTS READY, AS GIVEN BELOW.**

**STUDENTS ARE REQUESTED TO READ THE GUIDELINES CLEARLY BEFORE FILLING THE ONLINE APPLICATION FORM.**

**UNIVERSITY OF MADRAS**

## DOCUMENTS TO BE UPLOADED :

1) **Plus-One & Plus-Two Mark Statements,**
2) **Valid Income Certificate**(IC)(latest within 1 year) issued by Tahsildar
3) **First Graduate Certificate** (FG) issued by Tahsildar **(if applicable)**
4) **Disability Certificate (DC)** issued by Differently Abled Welfare Board / Government of India **(if applicable)**
5) **Father / Mother Death Certificate** issued by Corporation, etc.. **(if applicable)**

If Income Certificate and First Graduate certificate is not received in specified time, kindly upload the acknowledgement copy issued by Tahsildar office for the same. On receipt of certificates the same may be submitted to the office during Counseling.

**The application form along with required documents should be uploaded in the University website (www.unom.ac.in) within 15 days from publication of the Plus Two Result/Marks. ONLY ONLINE APPLICATIONS WITH ALL SCANNED COPIES DULY UPLOADED WILL BE ACCEPTED.** Student who failed to upload the required documents in the specified time , their application will summarily be rejected.

## பதிவேற்றம் செய்யவேண்டிய சான்றிதழ்கள்

1) **பதினொன்றாம் மற்றும் பன்னிரண்டாம் மதிப்பெண் சான்றிதழ்,** (கட்டாயம்)

2) **சமீபத்திய வருமான சான்றிதழ்** (ஒருவருடத்திற்குள்) வட்டாட்சியரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும். (கட்டாயம்)

3) **முதல் பட்டதாரி சான்றிதழ்** வட்டாட்சியரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும் (பொருந்தினால்),

4) **மாற்றுத்திறனாளி சான்றிதழ்** - மாற்றுத்திறனாளிகள் நலத்துறையிடமிருந்து பெற்றிருக்க வேண்டும் (பொருந்தினால்)

5) **தாய், தந்தை இறப்பு சான்றிதழ்** (பொருந்தினால்)

வருமான சான்றிதழ் அல்லது முதல் பட்டதாரி சான்றிதழ் கிடைக்கத்தாமதமானால் வட்டாட்சியரிடமிருந்து பெற்ற ஒப்புதல் சீட்டை பதிவேற்றம் செய்யலாம், சான்றிதழை கலந்தாய்வுக்கு வரும்பொழுது சமர்ப்பிக்கவும்.

விண்ணப்பத்தையும் அதில் குறிப்பிட்டுள்ள பொருத்தமான சான்றிதழ்களையும் சென்னைப் பல்கலைக்கழக இணையதளத்தில் (www.unom.ac.in) +12 தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் பதிவேற்றம் செய்யவேண்டும். இணையத்தளத்தில எல்லா மென்பிரதிகளுடன் (softcopies of certificates), பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். மேலே குறிப்பிட்டுள்ள ஆவணங்கள் பதிவேற்றம் செய்யத்தவறினால் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.

# UNIVERSITY OF MADRAS

## Madras University Free Education Scheme 2025-2026

**The Eligible Candidates will be selected on the basis of the following conditions:-**

- This scheme is applicable for the students resident in Tamil Nadu seeking admission in **Under Graduate Programme** in Aided and Self-Financing Colleges affiliated to University of Madras and appeared +2 examination during the current Academic Year i.e. 2024-2025.
- The students should have passed all subjects in first attempt and should submit both PLUS ONE and PLUS TWO mark statement otherwise the application will be rejected.
- The Family income should not exceed Rs. 3,00,000/- Per Annum as per the Income Certificate issued by Tahsildar, Revenue Department.
- Each college will be allotted with minimum **3 FREE SEATS** (i.e. 1 Free seat under each category) which will be sanctioned as an extra seats above the sanctioned strength by the University. The seats are allotted to different categories as given under :
    - **CATEGORY (i)** : 1/3rd of the seats for Widow's Children / Widower's Children / Orphan / Destitute children based on the marks obtained in Major subjects.
    - **CATEGORY (ii):** 1/3rd of the seats for First Graduate / Disabled / Transgender students based on the marks obtained in Major subjects.
    - **CATEGORY (iii)**: 1/3rd of the seats for Merit students who had obtained 80% of marks in the Major subjects.

# சென்னைப் பல்கலைக்கழகம்

## சென்னைப் பல்கலைக்கழக இலவசக் கல்வித்திட்டம் 2025-2026

பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் தகுதியானமாணவர்கள் தேர்வுசெய்யப்படுவார்கள்:

1. இந்த இலவசக் கல்வித்திட்டத்தின் கீழ் சென்னைப் பல்கலைக்கழகத்தில் இணைப்பு பெற்ற சுயநிதி மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இளநிலைபடிப்புகளில் சேருவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்கும் மாணவர்கள் 2024-2025 கல்வி ஆண்டில் பன்னிரண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும்.
2. மாணவர்கள் முதல் முயற்சியிலேயே அனைத்து பாடங்களிலும் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மேலும் பதினொன்றாம் மற்றும் பன்னிரண்டாவது மதிப்பெண் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும், இல்லையெனில் உங்களது விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
3. வருவாய் துறை வட்டாட்சியர் (Tahsildar) வழங்கிய வருமான சான்றிதழின்படி, மாணவரின் குடும்ப வருட வருமானம் ரூபாய் மூன்று லட்சத்திற்கு(Rs.3,00,000/-) மிகாமல் இருக்கவேண்டும்.
4. ஒவ்வொரு கல்லூரிக்கும் **குறைந்தபட்சம் 3 இலவச இருக்கைகள் ஒதுக்கப்படும்** (அதாவது ஒவ்வொரு பிரிவின் கீழும் 1 இலவச இருக்கை). இவை பல்கலைக்கழகத்தால் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கைக்கு மேலே கூடுதல் இடங்களாக அனுமதிக்கப்படும்.
    - பிரிவு 1:மூன்றில் ஒரு பங்கு இருக்கைகள் (1/3rd of seats) பெற்றோரை இழந்த மற்றும் ஆதரவற்ற மாணவர்கள் முக்கிய பாடங்களில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் வழங்கப்படும்.
    - பிரிவு 2: மூன்றில் ஒரு பங்கு இருக்கைகள் (1/3rd of seats) முதல் பட்டதாரி மாணவர்கள், ஊனமுற்ற மாணவர்கள் மற்றும் திருநங்கைகள் முக்கிய பாடங்களில் பெறப்பட்ட மதிப்பெண்களின் அடிப்படையில் வழங்கப்படும்.
    - பிரிவு 3: மூன்றில் ஒரு பங்கு இருக்கைகள் (1/3rd of seats) முக்கிய பாடங்களில் 80% மதிப்பெண்கள் பெற்றமாணவர்களுக்கு தகுதி **(MERIT)** அடிப்படையில் வழங்கப்படும்.
    - **ஒவ்வொரு பிரிவிலும் 1:2 என்ற விகிதத்தில் மாணவர்கள் கலந்தாய்வுக்கு அழைக்கப்படுவார்கள்**